Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 230

சனிக்கிழமை
13 ஜூலை 2024

ஆனி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி




"காதலுக்குத்தான் கண் இல்லை எண்டு பார்த்தால் இப்ப கடத்தலுக்கும் கண்ணில்லை போல"

# முடிந்தளவு விரைவாக தேர்தலை நடத்துங்கள்

## தேர்தல்கள் ஆ.குழுவுக்கு எம்.பி.க்கள் அவசர கடிதம்

கொழும்பு, ஜூலை 13
எவ்வளவு விரைவாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்துமாறு தேர்தல்கள் திணைக்களத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கடிதம் அனுப்பியுள்ளனர்.
ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் உட்பட சுயாதீன எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒப்பமிட்டு அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல் திணைக் ☞ 12



காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்காக

# மனிதப்புதைகுழியில் அமெ. கண்காணிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 13
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வாய்வின், எட்டாம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், அமெரிக்க அதிகாரிகள் நேற்று சிறப்புக் கண்காணிப்புகளை மேற்கொண்டனர். ☞ 11

## ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்துமாறு மனு

கொழும்பு, ஜூலை 13
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது என்று உத்தரவிடுமாறுகோரி, உயர்நீதிமன்றத்தில் மற்றொரு அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
"19ஆவது அரசமைப்புத் திருத்தம் உரியவகையில் நிறைவேற்றப்படாமையால் பொதுமக்களின் கருத்துகளை உள்வாங்கி அது நிறைவேற்றப்படும்வரை ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக்கூடாது. அவ்வாறு நடத்தப்படுவது அரசமைப்புக்கு முரணானது என்று உத்தரவிட ☞ 11

## நீதிமன்றத்தின் கட்டமைப்பில் நகைச்சுவைக்கு இடமில்லை!

### நீதி அமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 13
ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, நீதிமன்ற கட்டமைப்பை நகைச்சுவையாக்கும் வகையில் சில சட்டத்தரணிகளும், மனுதாரர்களும் செயற்படக்கூடாது என்று நீதி அமைச்சர் ☞ 11

## யாழ். நகர்ப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ☞ 11

## யுனெஸ்கோ பணிப்பாளர் இலங்கைக்கு வருகிறார்!

கொழும்பு, ஜூலை 13
ஐக்கிய நாடுகள் கல்வியியல், விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (யுனெஸ்கோ) பணிப்பாளர் நாயகம் ஒட்ரே அசோலே உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ☞ 11

## பெருந்தொகை கஞ்சா கொடிகாமத்தில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணம் - கொடிகாமம் பகுதியில் உள்ள வீடொன்றில் பொலிஸாரால் நடத்தப்பட்ட சோதனையில் 87 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர்களாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், ☞ 11

## ஆளணிப் பற்றாக்குறையை உடன் நிவர்த்தித்துத் தருக

### பிரதமரிடம் ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறைகளை உடன் நிவர்த்தித்துத் தரவேண்டும் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.
வடமாகாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் தினேஷ் குணவர்த்தன, யாழ்ப்பாணம் ☞ 12

## பெண் என்று நினைத்து திருநங்கை கடத்தல்!

ஊர்காவற்றுறையில் சம்பவம்

விரிவு :- பக். 11



## விநாயகரின் நகை எங்கே? மக்கள் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 13
ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட முத்துவிநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சுமார் 60 பவுணுக்கும் மேற்பட்ட நகைகள் காணாமற்போயுள்ள நிலையில், அவற்றை மீட்டுத்தருமாறு கோரி மக்கள் ☞ 11



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி சுமப்போருக்கு நீதி வழங்குங்கள்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 13

**காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையைக் கண்டறியாது அவர்களைத் தேடியலையும் உறவுகளுக்கு நீதி நிலை நாட்டப்படுவதுடன் நிலைமாறுகால நீதியை முன்னிறுத்திய நியாயபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம்.**

-இவ்வாறு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் காணாமற்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளுடனான சந்திப்பில் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் சவால்கள் தொடர்பில் அமெரிக்கத்தூதுவருக்கு விளக்கமளித்த அலுவலக அதிகாரிகள், அதன் அடுத்தகட்ட நடவடிக்கைகளில் இருதரப்புப் பங்காண்மை மற்றும் ஒத்துழைப்பைஏற்படுத்திக்கொள்வது குறித்து விரிவாக ஆராய்ந்தனர். அதேபோன்று மனிதப்புதைகுழி அகழ்வு உள்ளடங்கலாக காணாமற்போனோர் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் மனித எச்சங்களை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் அமெரிக்காவின் நிதி, தரவு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மை கண்டறியப்பட்டு, நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் என்ற தனது நிலைப்பாட்டை காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகளிடம் எடுத்துரைத்த அமெரிக்கத்தூதுவர் ஜூலிசங், நியாயபூர்வமான நடவடிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

'காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்காகக் காத்திருப்போருக்கு அதற்கான பதிலையும், ஆறுதலையும் வழங்குவதற்கு முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் அவசியமான ஒத்துழைப்பை வழங்க அமெரிக்கா தயாராக இருக்கிறது- எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார். (ச-இ)



மோப்பநாய் வேட்டை

# நெல்லியடியில் 17 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 13

நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட துன்னாலைப் பிரதேசத்தில் இராணுவம் மற்றும் பொலிஸார் மோப்ப நாய்களின் உதவியுடன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை விசேட சுற்றிவளைப்புச் சோதனை இடம்பெற்றது.

இதன்போது நீதிமன்றால் உத்தரவிடப்பட்ட திறந்த பிடியாணைகள், பிடியாணைகள், சட்டவிரோத மதுபான கசிப்பு விற்பனையாளர்கள் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட்ட 17 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின்பின் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26,27)

# மிரட்டலுக்கு அஞ்சோம்

## பொலிஸ்மா அதிபர் பதிலடி



கொழும்பு, ஜூலை 13

பாதாள உலக குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்குப் பாதாள உலக கும்பலிடமிருந்து கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரிகள் சிலரின் பெயர்கள் பட்டியல்படுத்தப்பட்டு அவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இந்த அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது பாதாள உலக குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடரும். விசேடமாக நாடளாவிய ரீதியில் உள்ள சட்டவிரோதத் துப்பாக்கிகள் அனைத்தும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு விசாரணைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# விவசாயிகளுக்கு ஓய்வூதியம் ரூ.5,386 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, ஜூலை 13

2024ஆம் ஆண்டுக்கான விவசாய ஓய்வூதிய கொடுப்பனவுகளை வழங்குவதற்காக அரசாங்கம் 5 ஆயிரத்து 386 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. அதுதொடர்பில் விசேட செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்காக வருடாந்தம் அரசாங்கம் பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கிறது.

2024ஆம் ஆண்டில் 60 வயது பூர்த்தியாகும் நிலையில் காப்புறுதியை பெற்றுக்கொள்ள ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 528 பேர் தகுதி பெற்றுள்ளனர்- என்றார். (ச-இ)



# பாதாளக் குழுவினர் டுபாயில் கைது

கொழும்பு, ஜூலை 13

கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு தலைமறைவாகியிருந்த பாதாள உலக கும்பலைச் சேர்ந்த இரண்டு இலங்கையர் டுபாயில் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அதிரடி நடவடிக்கையில் நேற்று அதிகாலை அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# தேர்தல் பரப்புரைக்கு அரசவளம் பயன்பாடு

## ஐ.ம.சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

தேர்தல் பரப்புரைகளுக்காக தற்போதைய அரசாங்கம் அரச வளங்களை மறைமுகமாகப் பயன்படுத்துகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கடிதமொன்றை அனுப்பி, ஐக்கிய மக்கள் சக்தி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 13 ஆம் திகதி பொலிஸாருக்காக செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்தச் செயலமர்வில் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வில் பிரதான பேச்சாளராக ஜனாதிபதி பங்கேற்பதானது அரச வளங்கள் பயன்படுத்தப்படும் தேர்தல் பரப்புரைக் கூட்டமே.

மேலும் தேர்தல் வாக்குச் சீட்டுகளை அச்சிடும் நிறுவனமான அரச அச்சகத்தை இடமாற்றம் செய்யும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. திணைக்கள ஊழியர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, தேர்தல் நடவடிக்கைகளில் தலையிடுவதற்கான தெளிவான முயற்சியே இதுவென்றும் எதிர்க்கட்சி குற்றஞ்சுமத்தியுள்ளது. (ச-இ)

# பால் உற்பத்திக்காக இந்தியா, பாக். உதவி

கொழும்பு, ஜூலை 13

இலங்கைக்கு கால்நடைகளை வழங்க இந்தியாவும் பாகிஸ்தானும் இராஜதந்திர மட்டத்தில் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பசும்பால் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் அதிகளவான பாலை பெறக்கூடிய பசுக்கள் இல்லாதது இலங்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா 'ஷிகிவால்' பசுக்களையும், பாகிஸ்தான் எருமைகளையும் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள மஹிந்த அமரவீர இதன்மூலம் பால் தட்டுப்பாட்டை நீக்கலாமெனவும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# டயானா மீது 7 குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு எதிராக குற்ற விசாரணைப் பிரிவினர் ஏழு குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர். குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் போலித் தகவல்களை வழங்கியமை, போலிய ஆவணங்களை வழங்கி கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டமை, குடிவரவு -குடியகல்வு சட்டத்தை மீறியமை உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை!

## மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜூலை 13**

**வடக்கு மாகாண கடற்றொழிலாளர்களுக்கென சீனநாட்டின் பொருத்து வீட்டுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. எங்களுக்கும் எங்கள் கரையோரச் சூழலுக்கும் பொருத்துவீடு பொருத்தமற்றது.**

-இவ்வாறு இலங்கை மீனவ மக்கள் தொழிற்சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நஷ்டஈடு. இலங்கை திணைக்களங்களால் வழங்குவதில்லை.
சீனநாட்டு மக்கள் போன்று எமது பிரதேசத்தை மாற்ற இலங்கை அரசு முற்படுகின்றது. பொருத்து வீடு கரையோரத்துக்குப் பொருத்தமற்றதும் உவர் நீருக்கு வெகுவிரைவில் உக்கலடைந்தும் விடும். சீனநாடு எமக்கு உதவிபுரிவதாக இருந்தால் வடக்கு - கிழக்கு மீனவர்களின் கருத்தை பெற்றே திட்டங்களை அறிமுகப்படுத்தவேண்டும். உதவிகளைப் பெறுகின்றோம் என்பதற்காக தரமற்றவற்றை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. கடற்றொழிலாளர்களுக்கு நிரந்தரத் தீர்வையே கேட்கின்றோம் - என்றார். (ச-125)



## ஜனாதிபதித் தேர்தல் நடப்பது உறுதியே!

### அலிசப்ரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13
தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம். அரசமைப்பின் பிரகாரம் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே ஆகும்.
- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உரையாற்றுகையில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;
இலங்கையில் எந்தக் குறைபாடுகள் இருந்தாலும் சர்வஜன வாக்குரிமையை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வரும் நாடாக இலங்கை விளங்குகிறது. ஒரு தடவை மட்டுமே உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவில்லை.
ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடக்கும்.
நாங்கள் தேர்தலுக்குப் பயப்படவேண்டிய எந்தக் காரணமும் கிடையாது. வரிசை யுகத்தை இல்லாது செய்துள்ளோம் - என்றார். (ச-இ)

## 13 தமிழக மீனவர்கள் 25 வரை மறியலில்!

யாழ்ப்பாணம், ஜூலை 13
அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 13 இந்திய தமிழக மீனவர்களும் எதிர்வரும்25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
மூன்று படகுகளுடன் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 13 இந்திய மீனவர்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

## நாளொன்றுக்கு புகைப்பிடித்தலால் 50-60 மரணங்கள்!



கொழும்பு, ஜூலை 13
நாட்டில் புகைப்பிடித்தலால் நாளொன்றுக்கு 50 முதல் 60 உயிரிழப்புகள் பதிவாகுகின்றன என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.
நாட்டில் நாளொன்றுக்கு 16 இலட்சம் பேர் புகைப்பிடிப்பதோடு, அதற்காக நாளொன்றுக்கு 50 கோடி ரூபாவுக்கும் அதிகமாக செலவழிக்கின்றனர்.
புகைப்பழக்கம் காரணமாக அதிகளவான மக்கள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மக்கள் மத்தியில் புகைப்பழக்கம் 9 வீதமாகக் குறைவடைந்துள்ளது என்றும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-555)

## 100 வயதுக்கு மேல் நாட்டில் 495 பேர்

கொழும்பு, ஜூலை 13
இலங்கையில் நூறு வயதைக் கடந்தவர்கள் 495 பேர் உள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
முதியோர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித்தொகையைப்பெற இந்த நபர்களுக்கும் உரிமை உண்டு.
"60 வயதுக்கு மேற்பட்டோர் 27 இலட்சம் பேர் உள்ளனர். ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 10 இலட்சத்தை தாண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## பணப்பரிசு ஆசைகாட்டி 180,000 ரூபா 'அபேஸ்'

கொழும்பு, ஜூலை 13
பணப் பரிசு வழங்கப்படவுள்ளது என்று தெரிவித்து பணமோசடி செய்த இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கேகாலையைச் சேர்ந்த 23 மற்றும் 30 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.
நபரொருவரின் தொலைபேசிக்கு அழைப்பு விடுத்து சுப்பர் மார்க்கெட் ஒன்றிலிருந்து பணப்பரிசு கிடைத்துள்ளது என்று மோசடியாளர் தெரிவித்துள்ளார். அதனை வைப்புச் செய்வதாக வங்கி கணக்கைப் பெற்று அதிலிருந்து ஒரு இலட்சத்து 80,000 ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## உதயன் தினம் தெரியுமோ?

எல்லா உதவியளுக்குப் பின்னாலையும் ஏதோவொரு அரசியல் புதைஞ்சுதான் கிடக்குது. அந்த அரசியல் என்னெண்டு அவையவைக்கு மட்டும் தான் தெரியும். தாங்கள் வரி கட்டுறதில இருந்து தப்பிறதுக்காகத்தான் பெரும் முதலாளியளும், நடிகர்மாரும் ஆக்களுக்கு உதவி செய்யிறவை, அப்பிடிச் செய்தால் அவைக்கு வரிவிலக்கு கிடைக்கும். அதைமாதிரி இப்ப கனபேர் தங்களுக்கு பப்ளிசிட்டி கிடைக்கும் எண்டதுக்காகவும் உதவிசெய்யத் தொடங்கிட்டினம். இன்னும் சிலருக்கு உதவி செய்யிறதால கிடைக்கிற புகழ் ஒரு போதையா மயக்கி வைச்சிருக்குது. அந்தப் புகழ்போதைக்காக அவை என்னவும் செய்யினம். சரி, ஆர் குத்தியெண்டாலும் அரிசி கிடைச்சால் சரிதானே எண்டுதான் எல்லாரும் நினைப்பம். ஆனால் தாங்கள் செய்யிற உதவியை வைச்சுக் கொண்டு மற்றவையை அடிமையாக்க நினைக்கிறதும், தாங்கள் செய்யிற பிழையளுக்கு பூம்பூம் மாடுமாதிரி தலையாட்டி தாளம் போடோனும் எண்டு நினைக்கிறதும் கடும் பிழைதானே?

ஒரு ஆஸ்பத்திரி. 'பெரும்' வருத்தம் வந்தவைக்கு அங்க ட்ரீட்மெண்ட் குடுக்கிறவை. அங்க வார்ட்டில நிக்கிறவைக்கு சத்தான சாப்பாடு குடுக்கோணும். அதுக்கு விலைகூடின பால்மா தான் சரி. அதிலதான் புரோட்டீன் எல்லாம் இருக்கு. ஆனால் அது கடும் விலை. அதால வெளிநாட்டில இருக்கிற ஒருத்தர் அவைக்கு சத்தான பால்மா வாங்கிறதுக்கு உதவி செய்யிறன் எண்டு சொல்லியிருக்கிறார். வழித்தேங்காய் எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிச்சுப் போட்டு, தன்ர தேங்காயைத்தான் அடிச்சன் எண்டமாதிரி படம் காட்டுற ஒருத்தரிட்ட அந்தக் காசை அனுப்பி மாவை வாங்கிக் குடுத்திருக்கினம். கிட்டடியில அந்த வழித்தேங்காய் வள்ளல், ஆஸ்பத்திரிக்காரரிட்ட 'இனிமேல் அந்த உதவி கிடைக்காது' எண்டு மொட்டையாச் சொல்லி இருக்கிறார். அவையும் 'ஏன் திடீரெண்டு நிப்பாட்டுகினம்?' எண்டு கேட்டிருக்கினம். 'எங்களைப் பற்றி சில செய்தியள் வந்ததால, அந்தக் காசை அனுப்பிறவை நிப்பாட்டிப் போட்டினம்' எண்டு பதில் வந்திருக்கு. வள்ளலைப் பற்றி செய்தி வந்ததுக்கும், காசு அனுப்பிறவை அதை நிப்பாட்டினதுக்கும் என்ன சம்பந்தம் எண்டு ஆஸ்பத்திரிக்காரருக்கு ஒண்டும் விளங்கேலை.

பிறகு அவை கொஞ்சம் விசாரிச்சுப் பாக்கேக்கதான் அவைக்கு உண்மை தெரியவந்திருக்கு. தன்ர இமேஜை உடைக்கிற மாதிரி செய்தி வந்தவுடன, ஆள் மண்ணெண்ணெய் பட்ட சாரை மாதிரி துடிச்சுப் பதைச்சுக்கொண்டு எல்லாருக்கும் போன் பண்ணி, தனக்கு சப்போர்ட்டா பேஸ்புக்கில எழுதச் சொல்லியிருக்கிறார். அப்பிடி ஆஸ்பத்திரிக்காரருக்கும் சொல்லி, அவை 'எங்களுக்கு ஏன் வீண் சோலி?'எண்டு எழுதாமல் விட்டிட்டினமாம். அதாலதான் இப்பிடியொரு தண்டனையாம். எப்பிடி விளையாட்டெண்டு பாத்தியளோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியமனங்கள் வழங்கல்





யாழ்ப்பாணம், ஜூலை 13
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர் நியமனம் மற்றும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவுக்கான மேலதிக விவாகப் பதிவாளர் ஆகிய நியமனங்கள் யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனால் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் வழங்கி வைக்கப் பட்டன. (ச-25,66)



அபிஷேகக் கந்தன் எனப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் குரோதி வருடக் காம்யோற்சவம், உஷக்காலப் பூசை, 108 சங்காபிஷேகத்துடன் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஆரம்பமானது.
தொடர்ந்தும் 25 தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக காம்யோற்சவம் இடம்பெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ப-66)



திருகோணமலை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்த பிரம்மோற்சவத்தின் இரதோற்சவத் திருவிழா கடந்த வியாழக்கிழமை அடியவர்கள் சூழ இடம்பெற்றது. (ச-50)

# நிரந்தர கிராமஅலுவலர் இதுவரையில் இல்லை

### அக்கராயன் மக்கள் அங்கலாய்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 13
கிளிநொச்சி , அக்கராயன் கிராம அலுவலர் பிரிவுக்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சிப் பிரதேச செயலகம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்று அக்கராயன் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் 700 குடும்பங்கள் வரை உள்ளன. இங்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதற்கு நிரந்தர கிராம அலுவலர் நியமிக்கப்படவில்லை.
பதில் கடமைபுரியும் கிராம அலுவலர் அக்கராயனுக்கு ஒருநாள் மட்டுமே பணிக்கு வருகை தருகிறார். இதனால் யானைகளின் அச்சுறுத்தல், பயிர் அழிவுகள், கொடுப்பனவுகள் பெறல் உள்ளிட்டவற்றில் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடுகிறது. எனவே அக்கராயனுக்கு நிரந்தர கிராம அலுவலரை நியமிப்பதற்கு கரைச்சி பிரதேச செயலர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-25,13)

## ‘யோகம் தரும் நல்வாழ்வு’ சிறப்புச் சிந்தனை

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவச யோகக்கலைக் கற்கைநெறி, நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடத்தப்பட்டு வருகின்றது. கற்கைநெறியின் ஒரு கட்டமாக, ‘யோகம் தரும் நல்வாழ்வு’ பற்றிய சிறப்புச் சிந்தனை அமர்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.15 மணி முதல் காலை 8 மணி வரை இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் ஓய்வுநிலை மருத்துவர் எஸ்.பாலசுப்பிரமணியம் வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ப-66)

## முத்தேர் பவனி



‘ஏழாலைச் சிவன்’ என அழைக்கப்படும் ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் முத்தேர் பவனி கடந்த வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச-22,66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படலாம். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளை அனுசரித்துச் செல்லவும்.

**மிதுனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. ஒருமுறைக்குப் பல முறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். பணம் இன்று கிடைக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உற்சாகமாக இருப்பீர்கள். காரியத் தடைகள் விலகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்களால்சிலபிரச்சினைகள் ஏற்பட்டுநீங்கும். மன அமைதி ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். விற்பனை சற்று குறைவாகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சு சாதகமாகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத் துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு பணவரவுடன் செலவுகளும் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உலகில் ஏழல்ல அதிசயங்கள்!

நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்தும் விதத்திலும், மக்களை பணயக் கைதிகளாக்கி நெருக்கடியை ஏற்படுத்தும் விதத்திலும் சில தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன என்று எச்சரித்திருக்கின்றார் அமைச்சர் காஞ்சன விஜயசேகர. மக்களைப் பணயக் கைதிகளாக்கும் செயற்பாட்டைத்தான் விடுதலைப் புலிகள் முன்னெடுத்திருந்தனர். ஆதலால், ஜோசப் ஸ்டாலின் போன்றோர் பயங்கரவாதிகளே என்றும் அமைச்சர் காஞ்சன 'கண்டறிந்திருக்கின்றார்'. ஜோசப் ஸ்டாலின் இலங்கையிலுள்ள பெரும் வர்த்தகத்தின் பிரதிநிதியல்லர். அவர் அறிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கை 'கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில்' நேரடியான தாக்கத்தை ஏற்படுத்த அல்ல அவர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி. அவரின் குரலும், அவர் தலைமையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களும் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்குமானவை. ஆதலால், எதற்கெடுத்தாலும் புலிச்சாயத்தைப் பூசித் தப்பித்துக்கொள்ளும் ஸ்ரீலங்கா அரசாங்கம் அதே பல்லவியை ஆசிரியர், அதிபர்களின் தொழிற்சங்கப் போராட்டத்திலும் பூசிவிட எத்தனிப்பது கலப்பற்ற அபத்தமே.

எல்லாவற்றையும்விட, அதிபர்களுடையதும், ஆசிரியர்களுடையதும் போராட்டம் இன்று, நேற்றுநடப்பது அல்ல. கடந்த பலவருடங்களாக அவர்கள் தங்களின் ஊதிய முரண்பாடுகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தி வருகின்றனர். தீவிரமான போராட்டங்களுக்குள்ளும், தொழிற்சங்க நடவடிக்கைகளுக்குள்ளும் அவர்கள் இறங்கி, ஐந்து ஆண்டுகளாகின்றன. இவ்வளவு பெருங் கால இடைவெளியில், ஒரு சமூகத்தின் அத்திபாரத்தைப் பலப்படுத்தும் தரப்பினரின் ஊதிய முரண்பாட்டைத் தீர்க்க முடியாததை எண்ணி அரசாங்கம் வெட்கப்படவேண்டும். அவர்களுக்கு உரிய பதிலை நிச்சயம் கொடுத்திருக்க வேண்டும். செய்ய வேண்டியதைச் செய்யாது விட்டுவிட்டு, அவர்களின் கோரிக்கை நியாயமற்றது என்றும், அது தற்போது நிறைவேற்றப்பட முடியாதது எனவும் கதையளப்பது அவ்வளவு அழகானதுமல்ல, ஆரோக்கியமானதும் அல்ல. அதிபர்களும், ஆசிரியர்களும் முன்வைக்கும் ஊதியக் கோரிக்கையை நிறைவேற்றமுடியாது என்று சொல்கின்ற இதே அரசாங்கம், கடந்த நான்கு ஆண்டுகளில் தேவையற்ற முதலீடுகளைச் செய்யவில்லையா? என்ற கேள்வி இங்கெழுவது தவிர்க்கப்பட முடியாததாகின்றது. நாடாளுமன்ற சிறப்புரிமையின் கீழ்நின்று, ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதி ஜோசப் ஸ்டாலினைப் பயங்கரவாதி என்று அடையாளப்படுத்தும் அமைச்சர் காஞ்சன, ஓர் ஆசிரியருக்கான ஊதியத்துடன், அமைச்சருக்கான விசேட வரப்பிரசாதங்களைத் துறந்து தன் பணியில் தொடரத் தயாரா? என்று வினவ வேண்டியிருக்கின்றது.

2025ஆம் ஆண்டு உலகிலுள்ள பல நாடுகளின் சிறப்பு ஒதுக்கீடுகள் பாதுகாப்புக்கு அடுத்தபடியாக கல்விக்கும், கல்வியை மையப்படுத்திய செயற்கை நுண்ணறிவுக்குமாகவே (ஏ.ஐ.) அமையும் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையிட்டுள்ள நிலையில், ஓர் நாடு ஆசிரியர்களைக் குறைமட்ட ஊதியத்துடன் வைத்துக்கொண்டு அவர்களின் தொழிற்சங்கத் தலைவர்களைப் பயங்கரவாதிகள் என்கின்றதென்றால், அது 'ஆசியாவின் அதிசயம்' மட்டுமல்ல, உலக அதிசயமும்தானே...!






# வேலைநிறுத்தங்களால் அரகலய வெடிக்கலாம்

அமைச்சர் பந்துல எச்சரிக்கை

**கொழும்பு, ஜூலை 13**

**வேலை நிறுத்தப்போராட்டங்கள் நாட்டை ஸ்திரமின்மைக்குள் தள்ளும் நடவடிக்கையே. இதனால் இன்னொரு அரகலய நாட்டில் வெடிக்கலாம்.**

-இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் போக்குவரத்து அமைச்சருமான பந்துல குணவர்த்தன கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கங்கள் நாணயத்தாள்களை அச்சிட்டன. இப்போது அப்படி நாணயத் தாள்களை அச்சிட முடியாது. அரசாங்க ஊழியர்கள் தொடர்ச்சியாக பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டால் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படும்.

எவர் ஆட்சியைக் கைப்பற்றினாலும் இரண்டு வாரங்களுக்கு மேல் நாட்டைக் கொண்டு நடத்த முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

## உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் ஜனநாயக உரிமைக்குத் தடை

கொழும்பு, ஜூலை 13

உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் ஹிட்லர் அரசமைப்பின் கீழ் ஜனநாயக உரிமைகளைத் தடை செய்தது போன்றது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றம் நீதிபதிகளின் நியமனத்துக்கு இடைக்காலத்தடை விதித்துள்ளது. இந்த தடையுத்தரவு அரசமைப்பின் 41ஆவது பிரிவை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ள விஜயதாஸ ராஜபக்ச, தனது அறிக்கைகள் பல்வேறு விதமாகத் திரிபுபடுத்தப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## வேகக்கட்டுப்பாடு விதிகள் விரைவில்



கொழும்பு, ஜூலை 13

வீதி விபத்துகளைக் குறைப்பதற்கு வேகக் கட்டுப்பாடு தொடர்பில் தேவையான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானியை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு 2,214 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. அதில் 2 ஆயிரத்து 321பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலைமையைக் குறைக்க எமது அமைச்சு பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

ரயில்வே திணைக்கள

## பணிப்புறக்கணிப்பால் 10 கோடி இழப்பு

கொழும்பு, ஜூலை 13

பணிப்புறக்கணிப்பு இடம்பெற்ற இரண்டு தினங்களில் புகையிரத திணைக்களத்துக்கு ஏறக்குறைய 10 கோடி ரூபா வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சாதாரண நாளில் ரயில்வே துறையின் பயணிகள் போக்குவரத்து பயணச்சீட்டு வருமானம் 4 கோடி ரூபா ஆகும். அந்த வருவாயுடன் இதர வருவாயையும் சேர்த்தால் தினசரி வருமானம் சுமார் 5 கோடி ரூபாவாகும் என்று அதிகாரி குறிப்பிட்டார். (ச-இ)

## அம்பானி மகன் திருமணத்தில் நாமல் பங்கேற்பு

கொழும்பு, ஜூலை 13

இந்தியாவில் நடைபெறும் ஆனந்த் அம்பானியின் திருமணத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச பங்கேற்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ச-இ)

**நாளை**

14.07.2024

**ஞாயிற்றுக்கிழமை - ஆனி - 30**

சுபநேரம் : 09.00 - 10.30

ராகுகாலம் : 04.30 - 06.00

நாளொரு நல்வார்த்தை

**வரவு அறிந்து செலவு செய்வது சிக்கனம். செலவு அறிந்து வரவு சேர்ப்பது நற்குணம்.**

- கவிதாசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவின் அரிசி வழங்க

# பிரதமர் யாழ். வந்தமை நகைப்புக்கிடமானது

யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ்ப்பாணத்துக்கு இதுவரை வருகைதராத பிரதமர் தினேஷ் குணவர்த்தன சீன அரிசியை வழங்கிவைப்பதற்காக வருகை தந்தமை நகைப்புக்கிடமானதாகவுள்ளது. இத்தகைய போலித் திட்டங்கள் வழங்குவதை சீனா விடுத்து, இலங்கையின் கடன் வட்டி வீதத்தைக் குறைக்க சீனா முன்வர வேண்டும்.

-இவ்வாறு அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி. சுப்பிரமணியம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட அரிசியை வழங்குவதற்கு எமது பிரதமர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார். சாதாரண அரிசியை வழங்குவதற்கு பிரதமர் வருகை தந்திருப்பது மிக நகைச்சுவையான ஒரு விடயம்.

ஏற்கனவே பழுதடைந்த சீன அரிசி எமது நாட்டில் தோல்வியடைந்த நிலையில், சீன அரிசியை கொண்டு வருவதை கைவிடவேண்டும். எமது நாட்டிலேயே அரிசியைக் கொள்வனவு செய்து வழங்கலாம். அபிவிருத்திகளை கடனுக்கு வழங்கி அதனை அறாவட்டிகளை பெற்றுக்கொள்ளும் நாடுகளால் எமது நாடு பட்டினியையும் பொருளாதார நெருக்கடியையும் எதிர்கொண்டது.

அந்த நிலையை ஏற்படுத்தாது இவ்வாறான நாடுகள் அரிசியை வழங்காது கடன் வட்டி வீதங்களைக் குறைக்கலாம் - பொருளாதாரத்தை வளர்க்கலாம் - என்றார். (ச-125)

நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பால்

# யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை வழங்குவதில் கடும் சவால்

## பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 13

**யாழ். போதனா மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது. இதனால் சிறப்பான சிகிச்சை வழங்குவதில் சவால்களை சந்திக்க நேரிடுகிறது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

யாழ்.போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மருத்துவமனைக்கு வீதி விபத்துகள் மற்றும் உயிர் மாய்ப்பு முயற்சி ஆகியவற்றின் காரணமாக அதிகளவான நோயாளிகள் நாளாந்தம் சேர்க்கப்படுகின்றன. 16 வயது தொடக்கம் 40 வயதுக்குட்பட்டவர்களே அதிகளவில் வீதி விபத்துகளில் சிக்கி, சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர். சாதாரணமாக ஒரு விபத்தை சந்தித்தவர் 3 தொடக்கம் 5 நாள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவர்.

அண்மையில் சுகாதார அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், இந்த நோயாளிகளை பராமரிப்பதற்கான செலவுகள் ஏழு மடங்காகக் காணப்படுகின்றது. இருப்பினும் மருத்துவமனையில் காணப்படும் ஆளணி மற்றும் வளங்களைக் கொண்டு சிறப்பான சேவையை வழங்கி வருகின்றோம். எனினும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் சிறப்பான சிகிச்சை வழங்குவதில் சவால்கள் தோன்றுகின்றது - என்றார். (ச-23)

# கிராம அபிவிருத்தி ஆராய்வுக் கூட்டம்

முல்லைத்தீவு, ஜுலை 13

முல்லைத்தீவு மாவட்டச் செயலக காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், துணுக்காய் பிரதேச செயலர் தலைமையில் கிராம அபிவிருத்தி தொடர்பான ஆராய்வுக் கூட்டம் அம்பலப்பெருமாள் குளத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் காணி, நீர்ப்பாசனம், போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் மக்களால் முன்வைக்கப்பட்டன.

அபிவிருத்திப் பணிகளுக்காக 60 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதன்மூலம் குளத்தின் அணைக்கட்டு வேலைகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் சி.விகிர்தன் தெரிவித்தார். (ச-25,13)

குண்டு எறிதல்

# மாகாண மட்டத்துக்கு மாணவி திசானா தெரிவு



யாழ்ப்பாணம், ஜுலை 13

யாழ்.வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் ஊரெழு கணேச வித்தியாசாலை மாணவி கு.திசானா 14 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவினருக்கான குண்டு எறிதலில் இரண்டாமிடம் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார். (ப)






கட்டிளமைப் பருவத்தினர் எதிர்நோக்கும் சவால்களைக் கையாள்வது தொடர்பான மாணவர்களிடையேயான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்.நயினாதீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. கலந்துரையாடலில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினார். (ச-66)

# கண்ணிவெடி அகற்றல் அமெரிக்க குழு ஆராய்வு

முல்லைத்தீவு, ஜுலை 13

இலங்கையில் கண்ணிவெடிகளை அகற்றும் 'டயஸ்' நிறுவனத்துக்கு நிதிப்பங்களிப்புச் செய்யும் நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் உயரதிகாரிகள் குழு அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளத்துக்கு களப்பயணமொன்றை மேற்கொண்டுள்ளது. அங்கு கண்ணிவெடி அகற்றல் தொடர்பான விடயங்கள் குறித்து கேட்டறிந்து ஆராய்ந்துள்ளது. (ப-113)



# அத்துமீறும் மீனவர்களால் எங்களுக்கு மீட்சியில்லை

யாழ்ப்பாணம், ஜுலை 13

மாதகல் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய இழுவைமடித் தொழிலாளர்களால் ஏற்பட்ட இழப்பீட்டை நிவர்த்தி செய்வதற்கு எனது தாலியை அடகுவைத்தும் மீள முடியவில்லை என வலிகாமம் தென்மேற்கு கடற்றொழிலாளர் சமாசத்தின் பொருளாளர் பெனடிக் நிர்மலா தெரிவித்தார்.

மாதகலில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாதகல் கடற்பரப்புக்குள் நேற்று அத்துமீறிய இழுவைமடி தொழிலாளர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களால் எமது இருபதுக்கு மேற்பட்ட மீனவர்களின் வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளன. அந்த மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது யார்? ஒவ்வொரு மீனவனின் குடும்பமும் இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளால் கோடி ரூபாக்களை இழந்த நிலையில் பலரின் நகைகள் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளன.

எனது பிள்ளைகளின் மீன்பிடி வலைகளும் இந்திய அத்துமீறிய இழுவைப் படகுகளால் அறுக்கப்பட்டுள்ள நிலையில் புதிய வலைகளை வாங்குவதற்காக எனது தாலியை வங்கியில் அடகு வைத்தேன்.

மீண்டும் தொடர்ச்சியாக இந்தியா இழுவைமடிப் படகுகளின் அத்துமீறலால் எனது பிள்ளைகளின் வலைகளும் அறுக்கப்பட்டு வரும் நிலையில் வங்கியில் அடகுவைக்கப்பட்ட தாலியை மீட்க முடியாமல் உள்ளது. அத்துமீறிய இழுவைப் படகுகளை கடற்பரப்புக்குள் நுழையவிடாமல் கடற்படையினர் அவர்களை தொடர்ச்சியாக கைதுசெய்ய வேண்டும் - என்றார். (ஒ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா, செட்டிகுளம், மெனிக்பாம் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 75 மாணவர்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால், 42 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய சீருடைத் துணிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ப-66)



யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபையினர் முன்னெடுத்த, மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு, சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பிரதி அதிபர் சபாரட்ணம் யசோதரன், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் சிவலிங்கம் ஸ்ரீதரன், யாழ்.கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் ஆசிரியை திருமதி சிவப்பிரியா ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)






சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பு சக்தி அம்மன் வித்தியாலய மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு, கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-9)



கிளிநொச்சி- திருவையாறு தூயவன் முன்பள்ளியின் விளையாட்டு நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. (22-13)



ஜே/90 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் பிரதான வீதியின் கரையோரங்களில் கடந்த செவ்வாய்க்கிழமை பயன்தரு மரங்கள் நடுகை செய்யப்பட்டன. (ப-66)



# தெற்கு வலயத்தின் விளையாட்டுப் போட்டி

வவுனியா தெற்கு வலயத்தின் விளையாட்டுப் போட்டி 5 வருடங்களுக்குப் பின்னர் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன் தலைமையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், துணுக்காய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.ஜெய்கீசன் மற்றும் மன்னார் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தபேந்திரலிங்கம் உட்பட ஆசிரியர்கள்,மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனா. (22-18)




துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாந்தை கிழக்கு கோட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டிகள், முல்லைத்தீவு - பாலிநகர் மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன் கலந்துகொண்டார். போட்டியில் பாலிநகர் மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. (15-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் விளையாட்டு இந்தமுறை எடுபடாது!

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



**கொழும்பு, ஜூலை 13**

**ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூகத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சில நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.**

அவரின் எந்தவொரு அரசியல் விளையாட்டும் எடுபடாது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் பற்றிய சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைமீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறந்த தந்திரவாதி. இவர் ஏதாவது செய்து ஒரு வருடத்துக்கு தேர்தலை ஒத்திவைப்பார் என்ற கருத்தாடலை ஏற்படுத்தவும் மக்களைக் குழப்பவுமே, அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகளா? 6 ஆண்டுகளா? என்ற சர்ச்சை தோற்றுவிக்கப் பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்தான், இதில் எவருக்கும் குழப்பம் இல்லை. உயர்நீதிமன்றமும் தெளிவாகக் கூறியுள் ளது. ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைப்பது என்பது சாத்தியமில்லை. ஜனாதிபதி நிச்சயம் தேர்தலை நடத்துவார்.

அந்த தேர்தல்மூலம் அவர் நிச்சயம் வீட்டுக்குச் செல்வார் - என்றார். (ப-44)

## நெடுந்தீவுத் திருவிழா இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

நெடுந்தீவு ஊரும் உறவும் நிறுவனம் அடுத்தமாதம் 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை 'மீண்டும் ஊருக்குப் போகலாம்' எனும் தொனிப் பொருளில் நெடுந்தீவை நிலைபேறான அபிவிருத்தி செய்யும் நோக்கில் 'நெடுவூர்த் திருவிழாவினை' சிறப்புற நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

குறித்த நிகழ்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னாயத்தங்கள் மற்றும் நிகழ்வின் மேலதிக பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் வகையில் முக்கியமான கலந்துரையாடல் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

(ம-22-66)

## பூஸா சிறையில் கைபேசி மீட்பு

பூஸா சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஐந்து கைத்தொலைபேசிகள், சார்ஜர்கள், டேட்டா கேபிள்கள் மற்றும் சிம் அட்டை என்பன கண்டுபிடிக்கப்பட்டதாக சிறைச்சாலை அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் கடுமையான குற்றவாளி களிடம் அவை மீட்கப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-இ)

## இந்தியர்கள் 6 பேர் கைது

விசா இன்றி இலங்கையில் தங்கியிருந்த 6 இந்தியப் பிரஜைகளை சட்டவிரோத சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

(ச-இ)

**காணி விற்பனைக்கு**

யாழ். கொக்குவில் சம்பியன் லேனில்
புதிய வீட்டுடன் 2 3/4 பரப்புக்
**காணி விற்பனைக்கு உண்டு.**

தொடர்பு:- 077 985 6762


**காணி விற்பனைக்கு**

G/S J/88 யாழ். மாநகரசபை வண்ணார் பண்ணை மேற்கு இராசாளிக்குளம் கரை 01 ஒவ்வொரு நிலப்பரப்பாக பிரிக்கப்பட்ட 30 துண்டு ஆதனம் J/88, G/S பிரிவில் வசிப்பவர்க்கும் அயல் கிராம மக்களுக்கும், சொந்த காணி அற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
(விலைக் கழிவு)
01 நிலப்பரப்பு 1500000/=

தொடர்பு: 077 352 5670

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1941



மறைவு 12 . 07 . 2024

### கணபதிப்பிள்ளை கணேசன்

**(கட்டைவேலி ப.நோ.கூ.சங்க கிளை முன்னாள் முகாமையாளர்)**

மலேசியா காப்பார்ஜ் ஐ பிறப்பிடமாகவும் வட்டுவத்தை, அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கணேசன் நேற்று (12.07.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் மூத்தமகனும் திரிபுவனேஸ்வரியின் பாசமிகு கணவரும் சுப்பிரமணியம், பார்வதிதேவி, பாலகிருஷ்ணன், குமாரசாமி, தெய்வநாயகி, நவநீதகிருஷ்ணன், பரமேஸ்வரி ஆகியோரின் மூத்த அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம்-சேதுநாயகம் தம்பதியினரின் மருமகனும் சிவகெங்கை, செல்லத்துரை பருவதவர்த்தனி, அருள்மொழி, ராணி சிவசங்கரநாதன், ஜெனரஞ்சினி, குகதாசன் ஆகியோரின் மைத்துனரும் சிறிபாலகணேசமூர்த்தி, பத்மலோஜினி, சிவபாக்கியம், சிவப்பிரகாசம், திலகவதி, சிங்கமாப்பாணர் ஆகியோரின் பாசமிகு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**சிறி (பெறாமகன்)**
**+0044 753 419 8933**
**[illegible]**
**077 386 7728**

**வட்டுவத்தை**
**அல்வாய் கிழக்கு**

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 02 . 1949



மறைவு 12 . 07 . 2024

### கந்தசாமி இரங்கநாதன்

சுழிபுரம் பொன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், காரைநகர் களபூமி திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரங்கநாதன் அவர்கள் நேற்று (12.07.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சத்தியபாமா (இளைப்பாறிய அதிபர், யா/ சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குலநாயகம் (சட்டத்தரணி) - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், வசந்தகுமாரி, வனிதா (கனடா), காலஞ்சென்ற வனஜா, குமரநாதன் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பராசக்தி, காலஞ்சென்ற விஜயலட்சுமி (ஆசிரியை), அம்பிகை, அருந்ததிதேவி, சிவநாதபிள்ளை (யோகு), காலஞ்சென்ற அருளானந்தம், வசுமதி (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும், தயாளினி, சுதர்சன், சுகந்தினி ஆகியோரின் சிற்றப்பாவும், விதுஷன், கஜானன், கோகன், கார்த்திகேயன் ஆகியோரின் பெரியப்பாவும், சிவதீபன், பார்த்தீபன், கோகுலன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணியளவில் அவரது திக்கரை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: மனைவி**
**பாமா - 077 9231 886**
**அருந்ததி - 077 3553 068**
**பேபி - 074 1283917**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றங்களை நாடுதல் தேர்தலைக் குழப்பும் சூழ்ச்சி

## டலஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவரவுள்ள இறுதிக் கட்ட நேரத்தில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் சிலர் நீதிமன்றத்தை நாடுகின்றனர். இது தேர்தலை குழப்பும் சூழ்ச்சியே.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தேர்தல் நடத்தப்படுவதை ஒத்திவைக்குமாறு நீதிமன்றித்தில் மனுத் தாக்கல் செய்யப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அறிவிப்பு விடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு சட்ட பூர்வமான அதிகாரம் இன்னும் நான்கு நாள் களில் கிடைக்கப்பெறவுள்ளது.


பிரஜைகளுக்கு நீதிமன்றத்தை நாடுவதற்குள்ள உரிமையை நான் சவாலுக்குட்படுத்தவில்லை. ஆனால், இறுதிக் கட்ட நேரத்தில் நம்பகத்தன்மையற்ற நிலையை உருவாக்குவதற்கு சூழ்ச்சி செய்யப்படுகின்றது - என்றார். (ச-44)


கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா, நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 03 . 1951

மறைவு 12 . 07 . 2024



## சின்னையா சிவராஜா

நல்லூரை பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவராஜா (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (12.07.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் (ஓய்வுபெற்ற மக்கள் வங்கி உத்தியோகத்தர்) அன்புக் கணவரும், சுஜித்தா (கணக்காளர்), கபிலன் (இலங்கை வங்கி ஊழியர்), நிருஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரிஷாந்தன், நிரோசி ஆகியோரின் அன்பு மாமனாரும், விகிர்தன், பார்கவி, கணாட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், தவமணி, சிவஞானம், சரோஜா, காலஞ்சென்ற சிவபாலன், சிவமலர், சிவரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் (316, கண்டி வீதி, அரியாலை) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்.
(077 44 350 39)

(CS 923) A-1

# அந்தியேட்டி நினைவு நாள்



தோற்றம் 25.04.1940

மறைவு 13.06.2024

"அம்மாவின் அன்பு கடல் அலை போல
வெளிப்பட்டுக்கொண்டே
இருக்கும் ஆனால் அப்பாவின் அன்பு
நடுக்கடல் போன்றது வெளியே தெரியாது
ஆனால் ஆழம் அதிகம்"

எங்கள் குடும்ப பெரு விருட்சத்தின் ஆணிவேராக இருந்து எம் அனைவரினதும் உயர்வுக்கும் மேம்பாட்டுக்கும் தன்னை தியாகம் செய்து எங்கள் வாழ்வில் ஒளிவிளக்காய் விளங்கிய எம் குடும்பக் குலவிளக்கு

அமரர்

## குமாரவேலு தெட்சணாமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டி கிரியை இன்று (13.07.2024) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். ஆத்மா சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

[illegible] வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலய துடுப் பாட்ட அணிக்கு 'தொடுவானம்' செயற்குழுமத்தால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சீருடைகள் கையளிக்கப்பட்டன. (ப-13)

# சமாதான நீதிவானாக நியமனம்




யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்.போதனா மருத்துவமனையின் ஓய்வுபெற்ற தாதிய அதிகாரியும் ஈச்சமோட்டை சனசமூக நிலையப் பொருளாளரும் சமூக சேவையாளருமான க. முருக மூர்த்தி யாழ். மாவட்ட நீதிவான் அ.அ. ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த மாதம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். (ச)

## முதன்முறையாக

# என்புமச்சை மாற்று சிகிச்சை யாழ்.போதனாவில் ஆரம்பிப்பு



கொழும்பு, ஜூலை 13

**யாழ். போதனா மருத்துவமனையில் என்புமச்சை மாற்று சத்திரசிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.**

இரத்தப் புற்றுநோய் மற்றும் அதனோடு இணைந்த நோய்களுக்கான சிகிச்சை களுக்கு வழங்கும் வகையில் இந்த சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இலங்கையில் மகரகம மற்றும் கொழும்பு சிறுவர் மருத்துவமனைகளில் மாத்திரம் இந்த சிகிச்சை நிலையம் காணப்பட்ட நிலையில் மூன்றாவது நிலையமாக யாழ்.போதனாவில் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சையை தனியார் மருத்துவ மனை அல்லது இந்தியாவில் போன்ற வெளிநாடுகளில் பெறுவதாயின் பல மில்லியன் செலவினம் ஏற்படும்.

இந்தச் சிகிச்சை நிலையம் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரணவால் எதிர் வரும் வாரம் திறந்து வைக்கப்படவுள் ளது. (ச-27)

# டலஸுக்கு பிரதான பதவி

கொழும்பு, ஜூலை 13

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணை யவுள்ள சுதந்திர மக்கள் காங்கிரஸின் தலைவர் டலஸ் அழ கப்பெருமவுக்கு முக் கியமான பதவி யொன்று வழங்கப்பட வுள்ளது எனத் தெரி விக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சக்தி யுடன் டலஸ் நேரடி யாக இணையும் பட் சத்தில் அவருக்கு மாத் தறை மாவட்ட இணை அமைப்பாளர் பதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன், ஐக்கிய மக் கள் சக்தியில் உறுப்பு ரிமைப் பெறும் சுயா தீன நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொகுதி மற்றும் மாவட்ட இணை அமைப்பாளர்கள் பதவி வழங்கப்படவுள் ளன என்றும் தெரிய வருகின்றது. (ப-44)

# ஜனாதிபதித் தேர்தல் கட்டாயம் நடக்கும்

## சுசில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்தான். எனவே, மக்களின் வாக்குரிமை உரிய வகையில் பாதுக்காக்கப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித் துள்ளார்.

உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துதல் பற்றிய சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பை மறுசீரமைக்கும் முயற்சியென்பது தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கை கிடையாது. 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்பட் டாகவேண்டும்.


ஜனாதிபதி யார்? நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார் ? என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும். இதுவே அரசின் நிலைப்பாடுமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-25,44)



# பக்தி இசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 13

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேர வையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்று வெள் ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மூத்த கலை ஞர் அருள் விக்னேஸ்வரன் குழுவினரின் பக்தி இசை நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து பல்கலைக்கழகத் துக்கு தெரிவான பண்டத்தரிப்பு சாந்தைப் பகுதியைச் சேர்ந்த பொருளாதார நலிவுற்ற குடும்பமொன்றைச் சேர்ந்த மாணவியொருவருக்கு ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய மடிக் கணினியும் வழங்கி வைக்கப்பட்டது. (ச-66)



நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீவள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான் ஆலய குரோதி வருட மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.05 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம் பமானது. (ச-66)

# பொன்சேகா, ராஜிதவுக்கு ஐ.ம.சக்தியில் இடமில்லை


கொழும்பு, ஜூலை 13

நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன ஆகியோருக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக இனி அரசியல் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள தால் இருவரும் அரசியல்ரீதியில் அநாதைகளாக்கப் பட்டுள்ளனர் . இவர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் இனி இடமில்லை. தேர்தலில் போட்டியிடவும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது. எனவே, ஏதாவது ஓர் அரசியல் முகாமில் தஞ்சமடைய வேண்டிய நிலை அவர்களுக்கு இருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (ச-25,44)



மீசாலையைச் சேர்ந்த 68 வயதுடைய பெண்ணொரு வர் மீசாலை கிழக்கு பாலை யடி விநாயகர் கோவிலின் நேற்றைய திருவிழாவில் பறவைக்காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறை வேற்றியுள்ளார். (ச-9)






வடமராட்சி கல்வி வலயத் துக்குட்பட்ட பாட சாலைக ளுக்கு இடையிலான தட களவிளையாட்டுவிழாவை முன்னிட்டு, தடகளப் போட்டி கள் ஹாட்லிக் கல் லூரி விளையாட்டு மைதா னத்தில் அண்மையில் நடைபெற்றன. (ப-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதப்...

இது குறித்து 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்கத் தூதரகம், "பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவை வெளியிடும் விதத்தில் முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி அகழும் பணிகளை தூதரக அதிகாரிகள் பார்வையிட்டனர்" - என்று தெரிவித்துள்ளது.





முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வாய்வுப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர், தடயவியல் பொலிஸாரின் பங்குபற்றுதல்களுடன் நேற்றையதின அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான அலுவலகத்தின் மனித உரிமைகள் அலுவலர் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருகின்றார். நேற்று நான்காம் நாளாகவும் அவர் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டார்.

முதலிருகட்ட அகழ்வாய்ப்புப் பணிகளின்போதும் 40 மனித எச்சங்கள் முழுமையாக மீட்கப்பட்ட நிலையில், மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் போது ஏழு மனித எச்சங்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டு அவற்றில் மூன்று மனித எச்சங்கள் முழுமையாக மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடையவை என்று சந்தேகிக்கப்படும் தகடுகள் உள்ளிட்ட தடயங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-19)

## ஜனாதிபதித்...

வேண்டும்" என்று மேற்படி அடிப்படை உரிமை மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுவின் பிரதிவாதிகளாகத் தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் உறுப்பினர்கள், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

19ஆவது திருத்தம் பொதுமக்கள் கருத்து கணிப்புக்கு உட்படுத்தப்படவேண்டும் என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் தீர்ப்பு வழங்கியபோதிலும் இதுவரை மக்கள் கருத்துக் கணிப்பின் மூலம் அது அங்கீகரிக்கப்படவில்லை என மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மக்கள் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்துமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு உத்தரவிடுமாறும் சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன தமது மனுவினூடாகக் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ம-66)

## நீதிமன்றத்தின்...

விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உயர் நீதிமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு தொடர்பில் டலஸ் அழகப்பெரும எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே நீதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது அரசமைப்பு மறுசீரமைப்புக்கு மக்களிடம் ஆணை கோரப்பட்டிருந்தது. ஜனாதிபதிக்கான பதவிக் காலத்தை ஆறில் இருந்து ஐந்தாகக் குறைத்தல், நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை ஐந்தாக நிர்ணயித்தல், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தல் போன்ற திருத்தங்களும் அவற்றில் உள்ளடங்கும். அவற்றை அடிப்படையாகக்கொண்டே 19ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மனுக்களை விசாரணைக்கு உட்படுத்திய உயர்நீதிமன்றம், அரச தலைவராக பிரதமர் இருத்தல் வேண்டும் என்பது உட்பட நான்கு விடயங்களை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் எனக் குறிப்பிட்டிருந்தது. இதனையடுத்து மேற்படி நான்கு விடயங்களும் கைவிடப்பட்டன.

பதவிக்காலம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற தர்க்கம் முன்வைக்கப்பட்டது. ஆறு வருடங்களை ஏழாக்குவதாக இருந்தால்தான் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம், ஐந்தாகக் குறைப்பதற்கு அவசியமில்லை எனத் தெளிவாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. எனவே, 19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது. 5 வருடங்களுக்குப் பிறகு ஒருநாள்கூட ஜனாதிபதியால் அந்தப் பதவியில் நீடிக்கமுடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியாக இருந்தாலும், நாடாளுமன்றத்தால் தெரிவுசெய்யப்பட்ட இடைக்கால ஜனாதிபதியாக இருந்தாலும் இது பொருந்தும்.

நீதிமன்ற நடவடிக்கையை நகைச்சுவைக்கு உள்ளாக்கும் வகையில் சிலர் செயற்படுகின்றனர். ஜனாதிபதியின் பதவிக்காலத்தை ஆறு வருடங்களாகக் கருதுமாறுகோரி உயர்நீதிமன்றத்தில் அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்குக் கட்டணமாக ஒரு இலட்சம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

நீதிமன்றத்தை நகைச்சுவைக்கு உட்படுத்தும் வகையில் செயற்படமுடியாது. சட்டம் தெரிந்த சில சட்டத்தரணிகளும் இப்படியான வழக்குகளில் முன்னிலையாகி தர்க்கங்களை வெட்கமின்றி முன்வைக்கின்றனர். நீதிமன்றமும் தனது பக்கச்சார்பற்ற தன்மையை உணர்ந்து செயற்படவேண்டும். மக்கள் ஐந்தாண்டுகளுக்குத்தான் ஆணை வழங்குகின்றார் எனில் அந்தக் காலம் முடிந்ததும் கௌரவமாக வெளியேறத் தெரிந்துகொள்ள வேண்டும்"- என்றார். (அ-ம-44)

## பெருந்தொகை...

ஒருவர் தேடப்பட்டு வருகின்றார். யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் வழிகாட்டலில், சாவகச்சேரிப் பொலிஸாரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய சங்குப்பிட்டிப் பாலத்தில் பொலிஸார் நடத்திய சோதனையின்போது காருக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இலங்கை போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் வவுனியாவைச் சேர்ந்த 47 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொடிகாமத்தில் வசிக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர் ஒருவரே தனக்கு கஞ்சா விநியோகம் செய்ததாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து கொடிகாமத்தில் உள்ள வீடொன்று நேற்று அதிகாலை சுற்றிவளைக்கப்பட்டபோது அங்கிருந்து 87.67 கிலோகிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து சந்தேகநபர் தப்பியோடிய நிலையில் வீட்டில் இருந்த சந்தேகநபரின் தாயார் கைது செய்யப்பட்டார். கைதான இருவரும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டநிலையில் இருவரையும் ஏழு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

தப்பியோடிய சந்தேகநபரை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ-ம-26-20-27-66)

## யுனெஸ்கோ...

இலங்கைக்கு வரவுள்ளார். இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வரும் அவர், எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நாட்டில் தங்கியிருப்பார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோரைச் சந்தித்து இலங்கைக்கான ஒத்துழைப்புகளை மேலும் விரிவுபடுத்துதல் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவர் கலந்துரையாடவுள்ளார்.

யுனெஸ்கோ அமைப்பினால் உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள இடங்களுக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (அ-ம)

## பெண்...

கோவிலுக்குச் சென்றுவிட்டு திரும்பிய திருநங்கையை, பெண் என்று நினைத்து கடத்திச் சென்ற மூவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த 24 வயதுடைய குறித்த திருநங்கை, ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள சிவன் ஆலயத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது மூவரடங்கிய குழு அவரை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றுள்ளது. பின்னர் அவர்கள் அந்தத் திருநங்கையைப் பிறிதொரு இடத்தில் இறக்கிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்துள்ளனர். அவர்கள் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டதுடன், ஆளடையாள அணிவகுப்புக்கும் திகதியிடப்பட்டது.

இதேவேளை - குறித்த கடத்தல்காரர்கள் யுவதி ஒருவரைக் கடத்தியதாகவே தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், பின்னரே அது யுவதி அல்ல, திருநங்கை என்பது தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27)

## விநாயகரின்...

நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நகைகளை மீட்டுத்தருமாறுகோரி, நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் புளியங்கூடல் சந்தியில் இருந்து பேரணியாகப் புறப்பட்ட மக்கள், பிரதான வழியாக முத்து விநாயகர் ஆலயத்தை அடைந்து, ஆலயத்துக்கு முன்பாகவும் நீண்டநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆலய நகைகள் திருடப்பட்டமை தொடர்பில், பொலிஸார் நீதியானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும். குற்றவாளிகள் இனங்காணப்பட்டு சட்டத்தின்முன் நிறுத்தப்படுவதுடன், நகைகளை மீண்டும் ஒப்படைக்கவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (அ-ம-20-27)

## யாழ்...

குறித்த வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வீட்டின் கதவினை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது ஆணொருவரின் சடலம் காணப்பட்டுள்ளது.

குறித்த நபர் இரண்டு தினங்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்த பொலிஸார், உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு அமைய சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளணிப்...

மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிறப்பு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் கலந்துகொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில், இணைத் தலைவர்களான ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரது தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்றது. இதன்போதே, வடமாகாணத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தித்துத் தருமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், குறிப்பாக அலுவலக உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் அதிகரித்துள்ளதால் 'உரித்து' தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஆளுநர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.

**கிளிநொச்சி**

இதைத் தொடர்ந்து நேற்றுமாலை இடம்பெற்ற கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்துகொண்டார். கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி, விவசாயம் போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டதோடு அவற்றை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் பரிசீலிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட வியாபார நிலையத்தையும் பிரதமர் திறந்துவைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இ.அங்கஜன், பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி மாவட்டச் செயலர், ஏனைய திணைக்களங்களின் செயலாளர்கள், ஆணையாளர்கள், பாதுகாப்புப் பிரிவினர், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

(அ-ம-26-113)

## முடிந்தளவு...

களத்தின் முழு அதிகாரத்தையும் பாவித்து மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(அ-ம-6)



## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நட்சத்திர சுற்றுலா விடுதிக்கு சகல துறைக்கும் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம், உணவு மற்றும் மேலதிக சேவைக்கட்டணமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
மின்னஞ்சல்: aom@thinnaifarms.com
**076 389 4995**



# மரண அறிவித்தல்



தோற்றம் 04 • 11 • 1965

மறைவு 11 • 07 • 2024

## ரவிச்சந்திரன் நிர்மலா (மல்லிகா)

### (GTZ நிறுவனத்தின் பணியாளரும் பொதுசேவையாளரும்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரவிச்சந்திரன் நிர்மலா (GTZ நிறுவனத்தின் பணியாளரும் பொது சேவையாளரும்) நேற்று முன்தினம் (11.07.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பெரியதம்பி - காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதி - அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், ஜெனாவின் பாசமிகு தாயும், இந்திரா, அருந்தவநாதன், புலேந்திரன், மித்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புஸ்பராணி, குணம், ஜெயமதி, குமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், பவுலா, நிக்கோன், விதுஷா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும், ஜெனேஷ், தாட்சாஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஸ்மித், ஸ்டீவ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பரமேஸ்வரி சனசமூக நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(cs.55654) (N - 1)

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 • 12 • 1946

மறைவு 07 • 07 • 2024

## திருமதி கெங்காதேவி தில்லைசிவலோகநாதன்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் புத்தூர் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கெங்காதேவி தில்லைசிவலோகநாதன் கடந்த 07.07.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தில்லைசிவலோகநாதன் (முன்னாள் SSO இ.போ.ச - கோண்டாவில் சாலை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் (பொறியியலாளர்) - நாகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (பதிவாளர்) -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், இந்திரா (கொ/ சேர் ராஸீக் பரீட் முஸ்லிம் மகளிர் கல்லூரி), சந்திரா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), தெய்வரதி (யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), சிவரதி (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் -யாழ். மருத்துவபீடம், கால்நடை வைத்தியர் - கனடா), றஜினி(ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மணிவண்ணன் (கொழும்பு), இளங்கோ (யா/இடைக்காடு மகா வித்தியாலயம்), பாலரஞ்சன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் -விவசாய அமைச்சு வட மாகாணம்), Dr.அருணா (முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் - கால்நடை மருத்துவபீடம் பேராதனை பல்கலைக்கழகம், கால்நடை வைத்தியர் - கனடா), சஞ்சீவன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் (முன்னாள் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர்), கமலாதேவி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலவாணர், கலாபரமேஸ்வரன் மற்றும் நாராயணமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் அட்சாஜினி, அம்சாஜினி, அக்ஷிலா, அபிருத், அனுஸ்கா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.07.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக புத்தூர் கிந்துசிட்டி பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுன்னாகம் வீதி,
புத்தூர் மேற்கு, புத்தூர்.

(CS 920) A-1

தகவல்:
குடும்பத்தினர்.



# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 73 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 2வது காணி.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- உங்கள் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2இலட்சம்.
- தரகர் தேவையில்லை.

**பார்வையிடும் நேரம்:**

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(CS/912) J-1





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.